திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

வழிகாட்டியைத் தந்தார்! வரலாற்றுச் சிறப்படைந்தார்!

நமது அருமைத் தலைவர் அண்ணா அவர்களின் சிறிய தாயாரும், கழகத் தலைவர்களாலும், ஆயிரக்கணக்கான தோழர்களாலும் "தொத்தா, தொத்தா" என அன்புடன் அழைக்கப்பட்டு வந்தவருமான ராசாமணி அம்மையார், நமது அருமை அண்ணாவையும், கழகத் தோழர்களையும் உற்றார் உறவினர்களையும் கலங்க விட்டு மறைந்தார்.

தென்னகத்து மக்களின் வாழ்வுக்கு கேள்விக்குறியாக இருக்கும் இந்தியை எதிர்த்து அறப்போர் துவக்கிய அண்ணா அவர்கள், எந்தத் தொத்தாவிடம் விடை பெற்றுச் சென்றாரோ, அர்த நேசத்துக்குரிய தாய், நெஞ்சம் நிறைந்த தாய், புன்சிரிப்போடு தன் மகனை போர்க்களத்துக்கு வழியனுப்பிய பெருமிதத்தோடு விழிமூடி விட்டார்!

விம்மும் இதயத்தோடு நமது அண்ணா அவர்கள் விழிகளிலே நீரைப் பெருக்கித் துயரக் கடலில் ஆழ்ந்துள்ளார்.

தன் தம்பிமார்களுக்குச் சிறிது துன்பம் என்றாலும் தாங்கமாட்டாமல் உள்ளம் உருகி ஆறுதல் கூறிய அண்ணா அவர்களுக்கு, இன்றையதினம் ஆறுதல் கூற யாரே வல்லார்?

கடந்த பத்துதினங்களாக அறிஞர் அண்ணா அவர்கள், தொத்தாவின் கடந்தகாலப் பணிகளை எண்ணி எண்ணி உள்ளம் உருகிக் கண்ணீர் வெள்ளத்தில் சிக்குண்டு கிடக்கிறார்!

வரலாற்றுச் சிறப்புமிக்க அம்மாவீரரை, வளர்த்து, உருவாக்கி நாட்டுக்கு ஈந்த ஒரு தாய் இன்றையதினம், தான் உருவாக்கிய மைந்தனின் சிறைவாழ்வு முடிவதற்குள் தன் வாழ்வை முடித்துக்கொண்டார்!

காஞ்சீபுரத்தில் அண்ணா அவர்களது இல்லத்தில் நுழைந்ததுமே

திருமதி இராசாமணி அம்மையார்

ஒலிக்கின்ற அந்த அன்புக்குரலை இனிமேல் கேட்க முடியாது!

தவறு செய்தவர்கள் யாராயிருந்தாலும் தட்டிக் கேட்ட அந்தத் தனிப் பண்பை இனிப் பார்க்க முடியாது!

நாட்டுக்குழைக்கும் தன் மகனுக்கு, நல்ல உதவிகளைச் செய்து பக்கபலமாக இருந்த அந்த அன்புத் தாயை இனிக் காண முடியாது.

எத்தகைய கொடிய அடக்குமுறைகள் தன் மைந்தனைக் கொட்டினாலும், தீர நெஞ்சத்தோடு அவைகளைத் தாங்கிக்கொண்ட வீரத் தாயை இனி என்றுமே காண முடியாது!

அந்தத் தாய் ஆயிரக்கணக்கானவர்களின் நெஞ்சிலே நீங்காத இடம் பெற்றுவிட்டார்.

அந்தத் தாய் அண்ணா அவர்களின் குடும்பத்தில் மட்டுமல்ல, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரது குடும்பத்திலும் இடம் பெற்றுவிட்டார்கள்.

அந்தத் தாய் அண்ணா அவர்களின் அரசியல் பணிக்கு சிறந்த பக்கபலமாக விளங்கினார்கள்.

கழக மாநாடுகளுக்கெல்லாம் வந்திருந்து அண்ணா அவர்களின் பேச்சையும், முன்னணி வீரர்களின் பேச்சையும் கேட்டு மகிழ்வார்கள். கழகத் தோழர்களின் குடும்பத்தினரைப் பற்றியும் அவர்கள் நலன் குறித்தும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, தன் மைந்தனுக்கிணையாகத் தானும் தம்மாலான பணியைச் செய்ய, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நகரமன்றத் தேர்தலில் காஞ்சிபுரத்தில் ஒரு தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிக்குரிய வாய்ப்பை குறைந்த வாக்குகளால் இழந்தார்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

4—1—64
8 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம்

மாலை 17. 4—1—64 மலர் 23

தாங்கமுடியாத துன்பம்!

——[0]——

அறிஞர் அண்ணா அவர்களது அருமைச் சிறிய தாயார் திருமதி ராசாமணி அம்மையார் அவர்கள் காலமானது குறித்து மிகவும் வருந்துகிறோம்.

நம்முடைய கழகக் குடும்பத்துக்கும் தி.மு.க. தோழர்களுக்கும் விலைமதிக்க முடியாதவராய் அண்ணா அவர்கள் எப்படி விளங்கி வருகிறார்களோ அதைப்போலவே தி. மு. கழகத் தோழர்களுக்கெல்லாம் தொத்தா அவர்கள் அன்னையாராக இருந்தார்.

அவரது மறைவு அண்ணா அவர்களது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, கழகத் தோழர்களுக்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அண்ணா அவர்களின் அரசியல் பணிகளுக்கு, பல துறைகளில் பக்க பலமாக இருந்த தொத்தாவின் பிரிவு அண்ணா அவர்களுக்கு தாங்க முடியாத துன்பமாகும். அண்ணா அவர்களது துன்பத்தில் நாமும் பங்கு பெறுவதோடு, அருமை அண்ணா அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

[ஆ.ர்]

மொரார்ஜிக்கு
"டெக்கான் ஹெரால்டு" ஏட்டின் பதில்!

காங்ரகிசு கட்சியின் உயர்மட்ட கட்சி வேலைக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மொரார்ஜி தேசாய் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நடந்த கர்நூல் பொதுக்கூட்டத்தில் இந்தியில் பேசினார். அதை எதிர்த்து கூட்டம் கலையத் துவங்கவே உடனே அவர் தனது பேச்சை ஆங்கிலத்தில் மாற்றிக்கொண்டு கூட்டத்தைக் கவரத் தொடங்கினார்.

மக்களுக்கு அவர் அப்போது உபதேசம் செய்கையில் "மக்கள் இரு தரப்பின் கஷ்டங்களையும் உணர்ந்து நடக்கவேண்டும். ஒருவருடைய தனி வழியையே மற்றவர் மீது திணிக்க முயலுதல் கூடாது'—என்று கூறினார்.

இந்தக் குடியரசில் பெரும்பான்மையராயுள்ள இந்தி பேசாதவர்கள்—இந்தி வெறியர்களிடமிருந்து இதைத்தான் கோருகிறார்கள்.

மேலும் அவர், ஆங்கில மொழியை மக்கள் தொகையில் ஒன்றரை சதவிகிதத்தினரால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்றும், ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் நாட்டிலிருந்து மறைந்துவிட வேண்டும் என்றும் கூறினார்.

இவருடைய இந்த வாதம், இன்று காங்கிரஸ் கட்சிக்கும் பொருந்தும் என்பதையும் அவர் எண்ணிப் பார்க்கவில்லை.

இந்நாட்டின் மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம் கூட தேறாத காங்கிரஸ்காரர்கள் இந்தியாவின் முழு அதிகாரத்தையும் ஏற்று, நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆட்சி செலுத்தவில்லையா?

நாட்டை ஆளும் அரசியல் சட்டபூர்வமான உரிமை, தங்களுக்கு இருக்கிறது என்று அவர்கள் கூறுவதில்லையா? அடிக்கடி சட்டப்பூர்வமற்ற முறைகளில் கூட மாநிலங்களில் தலையிட்டு தமது கட்சிக்கான பலத்தைச் சமப்படுத்திக் கொள்ள வழியில்லையா? ஆங்கிலத்திற்கெதிராக, மொரார்ஜி தேசாயின் ஒன்றரை சதவிகித வாதம் மிக வலிமை படைத்தது என்றால் காங்கிரசு ஆட்சி அதிகாரத்தை ஏகபோகமாக்கிக் கொள்ளக்கூடாது என்று எதிர்க்கட்சியினர் வாதிடுவதில் எவ்வளவு அதிகமான வலிமை இருக்கவேண்டும்?

மக்களில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே ஆங்கிலத்தை தெரிந்திருக்கலாம் ஆனால் அதைவிடப் பெரிய உண்மை அந்த மொழியின் வலிமையும்—விரிவும், இந்தியாவில் அதனுடைய பயனும் மிகப் பெரியது என்பதுதான். இந்தியாவில் மாநிலங்களுக்கிடையேயுள்ள தொடர்பு மொழியாக—உலகத் தொடர்பு மொழியாக இருக்கும் நிலையை மொரார்ஜி தேசாயின் 'ஒன்றரை' சதவிகித வாதம் பெரிய அளவில் தவறான வழிக்கு செல்கிறது.

மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்களிடமிருந்து மக்கள் மொழிப் பிரச்சினைக்கு புரிந்து கொள்ளக் கூடிய சிந்தனையுள்ள—பெருந்தன்மையுள்ள தீர்வை எதிர்பார்க்கிறார்கள்!

1-ம் பக்கத் தொடர்ச்சி

தொத்தா அவர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியும், நினைவாற்றலும் கொண்டு விளங்கியதாக இன்றைக்கும் பலர், அவரோடு பழகியவர்கள் கூறுவதுண்டு.

இடுகாட்டில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான நெஞ்சங்களை ஆற்றுப்படுத்த முயன்ற, காஞ்சி தங்கவேலர் அவர்கள்,

"அண்ணாவுக்கு குடும்பக் கவலையே இல்லாமல் எல்லாவற்றையும் கவனித்துவந்தார் தொத்தா. ஆண் பிள்ளைகள் கூட அப்படி நிர்வாகம் செய்ய முடியாது. அவரிடம் குடும்ப நிர்வாக முறையைக் கற்றுக் கொள்ளவேண்டும்"

என்று குறிப்பிட்டதிலிருந்து அவரது நிர்வாகத் திறமையை நன்கு புரிந்துகொள்ளலாம்.

அண்ணா அவர்களின் இளம் வயதிலிருந்து, அவரது பள்ளி வாழ்க்கை, பல்கலைக் கழகப் படிப்பு, அவரது அரசியல் பணி, எழுத்துப்பணி, நாடகப்பணி அனைத்துக்கும் ஒரு உதவியாளராக, ஆலோசகராக, பாதுகாவலராக விளங்கிய தொத்தா அவர்களது மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டபடி,

வழிகாட்டியை வளர்த்துத்தந்து, வரலாற்றிலே இடம் பெற்றவர் தொத்தா அவர்கள்.

அவரது வீர உள்ளத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக, அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டலாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரையொட்டிக் கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆசிரியர் என். வி. என். அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்களும் தொத்த அவர்களைப் பார்க்கக் காஞ்சீபுரம் சென்றிருந்தார்கள்.

அண்ணாவுக்கு எவ்வளவு தண்டனை கொடுக்கலாம் என்று என். வி. என். அவர்களிடம் கேட்டார்கள் தொத்தா. மூன்று மாதம் கொடுக்கப்படலாம் என்று என். வி. என். அவர்கள் கூறினார்.

உடனே தொத்தா அவர்கள், "அதிக காலம் தண்டனை என்றால் நான் பயந்துவிடுவேன் என்று என்னிடம் குறைத்துக் கூறுகிறாய். எவ்வளவு அதிகமாகக் கொடுத்தாலும் நான் கவலைப்படமாட்டேன், மகிழ்ச்சியடைவேன்' என்று உறுதியோடு கூறினார்கள்.

தொத்தா அவர்களுக்கிருந்த அரசியல் உணர்ச்சிக்கு இந்த நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அண்ணா அவர்கள், கடந்த பத்து நாட்களாக உடல்நலமின்றி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்கள் என்று செய்திவந்தது முதல் மிகவும் வருத்தமுற்றார்.

அதே நினைவாக நோயுற்ற அவர்கள், அண்ணா 'எங்கே, அண்ணா எங்கே? என்று கேட்ட வண்ணமே நினைவிழந்து, தன் அருமை மைந்தனின் திருமுகத்தைக் காணாமலே உயிர் துறந்தார்கள்.

துன்பக் கடலில் சிக்குண்டு கிடக்கும் அருமை அண்ணா அவர்களுக்கு ஆறுதல் கூறும் ஆற்றல் நமக்கெல்லாம் இல்லை.

இடுகாட்டில் கூடியிருந்தவர்களை ஆற்றுப்படுத்த முயன்ற கலைஞர் கருணாநிதி அவர்கள், "அண்ணா அவர்களே, மனம் வெதும்பினால்—உள்ளம் குமுறினால் நமக்கெல்லாம் ஆறுதல் சொல்வார் யார்' என்று குறிப்பிட்டதைப் போன்று அண்ணா அவர்களுக்கு ஆறுதல் சொல்ல நாம் இயலாதவர்களாயிருக்கிறோம்.

மறைந்த தொத்தா அவர்கள் நாட்டு வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுவிட்டார்கள்.

தென்னகத்துக்கே வழிகாட்டி ஒளிகாட்டி வரும் ஒரு ஒப்பற்ற தலைவரை உருவாக்கிய, அந்த அன்புத் தாய், பல்லாண்டுகள் ஆனாலும் அனைவரது நெஞ்சிலும்—தாயக வரலாற்றிலும் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்!

என்.வி.என். சோமு
பி. ஏ.

அறிஞர் அண்ணா
மற்றும் கழகத் தோழர்கள்
சிறையில் இன்று
50-வது நாள்



அடிப்படை நீதிக்குப் பொருந்தும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்!

ஆச்சாரியார் அவர்களின் கருத்துரை!

''தேசக் கௌரவத்தை அவமதிப்பதைத் தடுப்பதற்கு 1957ல் சென்னை ராஜ்யம் ஒரு சட்டம் போட்டது. இதன் கீழ்தான் திரு. அண்ணாதுரை அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு, சிறைவாசத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. அரசியல் சாசனத்தை அவமதிக்கும் நோக்கத்துடன் செய்த காரியம் என்று நிருபணம் செய்யாமலே தண்டனை தருவேன் என்று நீதிபதி தீர்ப்புச் செய்திருக்கிறார்.

தி. மு. க.வின் எரிப்புத் திட்டத்தை நான் ஒப்புக் கொள்ளாதது எல்லாரும் அறிவார்கள்; ஆனால் இப்போது ஆராய்ச்சிக்குரிய விஷயம் அதுவல்ல. நல்ல திட்டமா, உசிதமா என்பது விஷயமல்ல. அவமதிப்புச் செய்ததற்காக மட்டுமே தண்டனையைக் கூறுகிற ஒரு சட்டத்தின் கீழ் அவ்வித நோக்கம் இல்லாதவர் மீது குற்றம் சுமத்தி தண்டனை விதிக்கலாமா என்பதே கேள்வி.

அவமதிக்க வேண்டும் என்ற ஒரே தடமான நோக்கத்துடன் Wilful' ஆக—நடத்துகிற செயலைத் தண்டிக்கத்தான் 1957-ம் ஆண்டுச் சட்டம் இடம் தருகிறது.

திரு. அண்ணாதுரை அவர்களின் நோக்கம், அரசியல் சாசனத்தை அவமதிப்பது அல்ல. அதிலுள்ள ஆட்சிமொழி ஷரத்தைத் தாம் ஆட்சேபிப்பதையும், அந்த ஷரத்துத் திருத்தப்பட வேண்டும் என்று தாம் விரும்புவதையும் நாடு அறிய வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம்.

நாட்டின் கவனத்தைக் கவருவதற்கு ஓர் உபாயமாகவே அவர் சாசனத்தின் குறிப்பிட்ட பகுதியை எரிக்கத் திட்டம் வகுத்தார். இது, அரசியல் சாசனத்தையாவது, நாட்டையாவது அவமதிக்கிற நோக்கத்தில் சேராது.

அரசியல் சாசனத்துப் பிரதிகளில் ஒன்றின் பகுதியை எரிப்பதைவிட, சாசனத்தையே ஆட்சியாளர்கள் அடியோடு மாற்றுவது சாசனத்துக்கு இழைக்கப்படும் பெரிய அவமரியாதை ஆகும்.

வேறு நோக்கத்தோடு சாசனத்தில் ஒரு பிரதியை எரிப்பதே 'அவமதிப்பு' என்கிற அளவுக்கு அதனைத் தெய்வீக லிங்கமாகக் கொண்டால் அதன் உயிரான ஜீவாதார ஷரத்துக்களை மாற்றுவது அதைவிட பெரிய அவமதிப்புக் குற்றமாகாதா?

பார்லிமெண்டின் மெஜாரிட்டி பலத்தால் இஷ்டப்படி மாற்றப்படும் சாசனத்தை ஒரு தெய்வீக லிங்கமாகக் கருதுவதில் சாரம் இல்லை.

முக்கியமாக, சாசனத்தை அவமதிக்கும் நோக்கத்தோடு வகுக்கப்படாத தி. மு. க. வின் திட்டத்தைக் குற்றமாகக் கருதுவது பொருளற்றதாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, கதர் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த சமயத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. திருப்பதி மலையடியிலுள்ள திருச்சானூரில் தாயார் கோயிலில் பிரவேசித்ததற்காக அரிசன் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அந்த நாள் குற்றச் சட்டப்படி, ஜஸ்டிஸ் முத்துசுவாமி ஐயரவர்களின் தீர்ப்பு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு, அரிசன் ஒருவர் கோயிலில் பிரவேசிப்பது அதன் புனிதத்தைக் குலைக்கும் குற்றமாகக் கருதப்பட்டது. இதன்படிதான் அந்த அரிசன் மீது வழக்குப் போடப்பட்டிருந்தது.

ஒத்துழையாமை இயக்கத்தின் கீழ் தொழிலை விட்டபோதிலும், இந்த வழக்கில் அவரது சார்பில் வழக்காடுவதற்கு நான் பிரத்தியேக அனுமதி கோரி விண்ணப்பித்தேன்; அனுமதி அளிக்கப்பட்டது. முன்னொரு சமயம் சென்னை ராஜ்ய முதன் மந்திரியாயிருந்த திரு. முனுசாமிப் பிள்ளை அவர்கள் பிரதிவாதிக்காக ஆஜராகியிருந்தார். பிரபல கணித விற்பன்னரான ஸ்ரீமான் வி. ராமஸ்வாமி அய்யரவர்கள்தான் வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட்.

நான் இப்படி வாதிட்டேன்—

''பிரதிவாதி ஆலயத்தில் பிரவேசித்த அன்று உற்சவ தினமாகும். நூற்றுக்கணக்கான மக்கள் அன்றைக்குப் பரவச பக்தியில் கோயிலுக்குச் சென்றார்கள்· பிரதிவாதியும் அவர்களைப் போலவே முழுகி, திருமண் இட்டுக்கொண்டு, ஆவேச நிலையில் 'கோவிந்தா, கோவிந்தா' என்று கூவியபடி கூட்டத்தோடு கூட்டமாகக் கோயிலில் பிரவேசித்துவிட்டார். ஆனபடியால் கோயிலின் புனிதத்தைக்குலைக்க வேண்டும் என்பது அவரது நோக்கம் அல்லவே அல்ல. வழிபட வேண்டும் என்றே ஆலயத்தில் பிரவேசித்தார். சிவில் சட்டப்படி அவரது செயலை அத்து மீறிய பிரவேசம் என்று கொண்டாலும், குறிப்பிட்ட குற்றப் பிரிவின்படி அவரைத் தண்டிக்க முடியாது.

மாஜிஸ்திரேட் என் வாதத்தை ஏற்றுக்கொண்டு, பிரதிவாதியை விடுதலைசெய்துவிட்டார். மாஜிஸ்திரேட்டின் தீர்ப்புக்கு மேலாகச் சர்க்கார் அப்பீல் போடவில்லை.

அதே நியாயப்படி, கெட்ட எண்ணம் என்கிற முக்கியமான அம்சம் இருந்ததா இல்லையா என்று பார்த்தால், திரு. அண்ணாதுரை அவர்களின் எரிப்பு உத்தேசம் குற்றத்தில் சேராது.

நோக்கத்தை முன்னிட்டுத்தான் செயலை நிர்ணயிக்க வேண்டும் என்ற விதிப்படி, திரு. அண்ணாதுரை இப்போதுள்ள சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என்றே கருதுகிறேன்.

அவ்வாறெனில், எரிப்புத் திட்டங்களைச் சர்க்கார் தடுக்க விரும்பினால் எப்படித் தடுப்பது என்கிற கேள்வி எழலாம். இதற்கு விடை மிகவும் எளியது; சாசனத்தை எந்தக் காரணத்துக்கும் எரிக்க முற்படக் கூடாது. என்று ஓர் உத்தரவு பிறப்பித்து விடலாம். கலகாஸ்பதமான முறையில் உத்தரவை மீறியதற்குத் தண்டிக்கலாம்.

தி· மு. க. வின் திட்டத்தில் சாசன அவமதிப்பும், அமைதிக்குப் பங்கமும் இருப்பதாகக் கருதிக் குற்றம் சாட்டியது தவறு என்கிறேன். இந்த வாதம் சட்டப்படி செல்லாது எனில், அந்தச் சட்டம் அடிப்படை நீதித் தத்துவங்களுக்கு முரணானது. அதை நீதிக்குப் பொருந்திய வகையில் திருத்தியாக வேண்டும்.

குற்றம் செய்யும் நோக்கமில்லாமல் செய்யப்படும் காரியங்களைக் குற்றம் என அரசாங்கம் கருதுவது நாகரிகமல்ல, அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத முறையில் எதிர்ப்புக் கூட்டங்களை ஒழுங்கு செய்யவேண்டுமேயன்றிக் குற்றச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது தகாது.

கடைசியாக ஒரு வார்த்தை; வடக்கும் தெற்கும் பரஸ்பர நல்லெண்ணத்தோடும் இதயபூர்வமான ஒற்றுமையோடும் வாழ வேண்டும் என்று ஆட்சித் தலைவர்கள் விரும்புகிறார்களா? அல்லது இந்தி மொழி மத்திய சர்க்காரில் இப்போதிலிருந்தே ஆட்சி மொழியாக வேண்டும் என்பதைத் தேச ஐக்கியத்தை விடப் பெரிதாக நினைக்கிறார்களா? தேச ஐக்கியம்தான் முக்கியம் என்பதை யாரும் ஒப்புக் கொள்வார்கள்.

இந்த சத்தியமான கருத்துக்கு விரோதமாகத்தான் இன்று ஆட்சி மொழிக் கொள்கையும், குற்றச் சாட்டுக் கொள்கையும் செல்கின்றன.

—என்று திரு. சி. இராசகோபலாச்சாரியார் அவர்கள் 28—12—63 'சுயராஜ்யா' இதழில் கருத்தறிவித்துள்ளார்கள்.

○

சிறு கதை

"ஓவியம்"

ச. பொன்னரசன்

சின்னஞ் சிறு பெட்டிக்கடை! எப்பொழுதும் அங்குதான் உட்கார்ந்து கொண்டிருப்பது அவன் வழக்கம். தாடியும், மீசையுமாக சுருண்டிருக்கும் மயிர் அழுக்கேறி பரட்டைத் தலையுடனிருக்கும் அவனை, நாற்பது, ஐம்பது, அறுபது வயது நிறைந்தவன் என்றுதான் எவரும் சொல்லுவார்கள் உண்மையில் அவன் இளைஞன்—இருபத்தேழு வயது நிறைவும் பெருதவன்.

அவன் போட்டுக் கொண்டிருந்த துணிகள் கிழிந்திருக்கும். ஆனால், எப்படியும் வெண்மையாகவே துணிமணிகளை அணிந்துக் கொள்வான்.

ஒரு சிப்பா, ஒரு வேட்டி, ஒரு துண்டு அதுதான் அவன் எப்போதும் விரும்புவது — அதே உடையில் என்றும் இருப்பான்.

சரிந்த புருவம்; குழி விழுந்த கண்கள்; சுருக்கங்கள் நிறைந்த முகம். ஏன், அந்த முகத்தில் எந்நேரம் துயரம் நிறைந்திருக்கும். இருந்தாலும், எல்லோரிடமும் சிரித்துப் பேசுவது அவன் வழக்கம்.

நகைச்சுவை கதைகளையும் சிறு சிறு சிரிப்புக்களை உண்டாக்கும் துணுக்குகளையும், சொற்களில் சேர்த்துச், சேர்த்துப் பேசி கேட்போரையும் அவனை வெறுப்போரையும் குலுங்கக் குலுங்க சிரிக்க வைப்பதில் சமர்த்தன்.

படித்தவன்; பார்த்ததை தத்ரூபமாக வரைந்து காட்டும், கை வன்மை மிக்க சிறந்த ஓவியன்; அதனால், மிட்டாய்க் கடையில் மொய்த்துக் கொண்டிருக்கும் ஈக்கள் கூட்டம் போல் அவனிடம் பள்ளிப்பாலர்கள் 'எனக்கு இந்தப் படம் போட்டுத் தா!...... அந்தப் படம் வரைந்து கொடு!' என்று தொல்லைகள்பல கொடுத்து சூழ்ந்து கொண்டிருந்தாலும் சலிக்காது வரைந்து—ஈந்து, அத்தனை குழந்தைகளின் விருப்பப்படி நடந்து கொள்வான். அச் குழந்தைகள் என்றும் மறக்க இயலாதபடி, அந்த பிஞ்சு நெஞ்சங்களில் இடம் பிடித்துத் கொண்டவன் அவ் வோவியன்.

ஆதலால்,

அவ்வூர் பெரியவர்கள் முதல், சிறியவர்கள் வரை அவனுக்குத் தனி மதிப்பீந்து "வணக்கம் வாப்ப" என்றழைத்து, உட்கார வைத்து, உள்ளம் பூரிக்கப் பேசுவார்கள்!

இதனால்,

மலை போன்ற துன்பத்தை மறந்துவிட்டு, மக்கள் மன்றத்தில் மகிழ்வதே அவன் 'நிம்மதியானது!' என்று கருதி வந்தான்.

பெரியதோர் பணக்காரக் குடியுமல்ல; மிகக் கடை வாழ்வு நிறைந்த ஏழ்மையுமல்ல; உண்பதும்—உடுப்பதும் அவனுக்கு என்றும் தாராளமாகக் கிடைக்கக்கூடிய இடைநிலை வாழ்வின் அங்கம் தான் அவன்.

இருந்தும்,

உறவற்றவன் போல், உறங்க இடமற்றவன் போல், பெற்றோர் அற்ற அனுதையானவன் போல் அவன் நடப்பான் — புதியவர்களின் பார்வைக்கும் தெரிவான்.

ஏனே?

தன் வாழ்க்கையை இங்ஙனம் மாற்றிக் கொண்டானு? என்று பலருக்கும் அவன் மீது பரிதாபம் ஏற்படும்—பாழ்பட்டிருக்கும் அவனின் வாழ்க்கையின் வரலாற்றை அறிய மனமும் துடிதுடிக்கும்.

சிலர், அவனிடம் நெருங்கிக் கேட்கவும் தொடங்கி விடுவார்கள். அதற்கெல்லாம் தக்க விடை எதுவும் சொல்ல மறுத்து விடுவான். 'புதைந்துவிட்ட விசனக் குழியை மீண்டும், மீண்டும் தோண்டி யெடுத்து, என்னை பித்தனுக மாற்றிவிட வேண்டாமென்று மிகப் பணிவன்புடன் வேண்டிக் கொள்வான்! அவன் சொற்களை கேட்கும் பலருக்கும், மீண்டும் வாய் திறந்து பேச மனமில்லாது, அவனை வேறு வழியில் திருப்பி பேச விடுவார்கள்.

பேசுவான் — இனிய சொற்களில் தத்துவத்தைக் கரைத்து, குற்றம் புரிந்த மனம் வெட்கப்படும்படி பேசுவான்! நீதி, நேர்மை, வாய்மை, அன்பு, கொல்லாமை என்ற வள்ளுவரின் முதுமொழிகளை பிரித்துப் பிரித்து அதற்கெல்லாம் சிறிய கதைகளை புனைந்து—சிரிப்பினில் குழைத்து ஊட்டுவான்!

உட்கார்ந்து கேட்போருக்கு அவ்விடத்தை விட்டுப் போக மனமே வராது எனலாம்.

அன்று வழக்கம்போல் அந்த பெட்டிக் கடையில் உட்கார்ந்துக் கொண்டிருந்தான் அந்த ஓவியன். அவனிடம், என்றும் வரும் பள்ளி மாணவ மாணவிகள் படம் வரைந்துக் கொண்டும், ஓடிக் கொண்டுமிருந்தார்கள்!

கடைசியாக, ஒரு சின்னஞ்சிறு பெண் ஓடி வந்தது. தன் கையிலிருந்த துண்டுக் கடிதத்தை நீட்டி 'இதில்...படம்...!' என்றிழுத்து; முல்லை பற்கள் தெரிய சிரித்தது!

உரித்துத் தின்றுவிடக் கூடிய பழம்போல் நின்ற அக்குழவியைக் கண்ட ஓவியன் சிரித்தான்! கள்ளமில்லா உள்ளம் கொண்ட அக்குழந்தையை அன்புடன் அணைத்துக் கொண்டான்!

'குழந்தை! உன் பெயர் என்னம்மா?' என்று பாசத்துடன் கேட்டான்.

'பொன்மதி' — கரு விழிகள் களித்திட கன்னல் மொழியில் பதில் சொல்லிற்று; கலைச்சோலைக் கிள்ளைப் போல், அவன் கரத்தின் மீது சாய்ந்துக் கொண்டது!

துல்லியமான நீரைப் பார்க்கும் வெள்ளை நிற அல்லிபோல், கொள்ளைக் கொள்ளும் குழந்தையின் உருவத்தைத் தடவிக் கொண்டே,

'பொன்மதி!'......

சிங்காரமானப் பெயர் — சிந்தனைக்குரியப் பெயர். ஆமாம், உனக்கு படம்வரைந்துக் கொடுத்தேனே நேற்று...அதை என்ன செய்தே? என்ருன் அவன்.

'அந்தப் படத்தை எங்கம்மா வாங்கி, பெட்டியிலே பத்திரமா வைச்சிக்கினுங்கோ' — என்றது குழந்தை.

'உங்கம்மாவா?'

'ஆமாம்! அந்தப் படத்தைத் திரும்பி பெட்டியிலிருந்து எடுத்தாங்கோ, எங்கம்மா—கொஞ்ச நேரம் படத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தவங்கோ—படத்தை கிழிச்சிக் கிழிச்சி எரிந்துக் கொண்டிருந்த அடுப்பில் போட்டுக் கொளுத்திப் பூட்டாங்கோ!'

இந்தி புகுந்தத் தமிழகம் போல், அந்தக் குழந்தையின் முகம் ஒரு மாதிரியாக மாறி விட்டது! பாவம்! பரிதாபமாக நின்றது!

'ஏன்?' ஆச்சரியமாகக் கேட்டான் ஓவியன்.

'அந்த மாதிரிப் படம், படிக்கிற பெண்ணுக்கு வேண்டாமாம்.'

'என்ன படம் வரைந்துக் கொடுத்தேன்?'

'ஒரு போலீசுக்காரன், ஒரு ஆளை அடிப்பது போலே...'

'தப்புத்தான்!...சின்னக் குழந்தைக்கு வரைந்துக்கொடுக்கக் கூடாத படம்தான்!.........சரி, இப்போ உனக்கு என்ன படம் வேண்டும் மதி?'

'எனக்கு...எனக்கு என்னைப் போலவே ஒரு படம் வரைந்துக் கொடுக்கணும்...ஊம்!'

'உன்னைப் போலா?'

அதுவரை அக்குழந்தையின் உருவத்தை ஊன்றி பார்க்காத

"தொத்தா"வின் இறுதிப் பயணம்

கழகத் தலைவர்களின் இரங்கல் உரை

அறிஞர் அண்ணா அவர்களை சிறு வயதிலிருந்தே மடி மீதும், தோள் மீதும் இட்டு வளர்த்தவரும், கல்வி பயில வைத்து, அரசியலில் ஈடுபடச் செய்தவருமான தொத்தா அம்மையார் அவர்கள் 31—12—63 அன்று பகல் 12-30 மணிக்கு இயற்கையெய்தினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களைச் சிறு வயதிலிருந்தே வளர்த்து, படிக்க வைத்து, பகுத்தறிவு இயக்கத்தில் முழு மனதோடு ஈடுபட வைத்தவர் தொத்தா அவர்கள் ஆவார்

அறிஞர் அண்ணா அவர்கள் மீதும், கழக முன்னணியினர் மீதும் மிகுந்த அன்பு காட்டிய மூதாட்டியாரவார்.

ஏழு நாட்களுக்கு முன் அவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகி "அண்ணா எங்கே; அண்ணா எங்கே" என்று கூறவே அறிஞர் அண்ணா அவர்கள் பரோலில் விடுதலையாகி, காஞ்சிபுரம் சென்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் போய்ச் சேருவதற்கு முன்பே—அருமை தொத்தா அம்மையாரின் நினைவு தவறிவிட்டது. எனவே தான் ஆசையோடு வளர்த்த மகனைப் பார்க்கவும் பேசவும் முடியாத நிலையிலேயே அவர்கள் மரணமடைந்தார்கள்.

தொத்தா அம்மையாரின் உயிரைக் காப்பாற்ற டாக்டர்கள் 4 நாட்கள் பலமாகப் போராடியும் பலனளிக்காமல் போய்விட்டது.

31-12-63 அன்றுபகல் 12-30 மணியளவில் தொத்தா அம்மையார் இயற்கை எய்தினார்.

மரணச் செய்தி அறிந்ததும் எண்ணற்ற தோழர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அண்ணா அவர்களின் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

தொத்தா அம்மையார் சடலம் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வீட்டுக் கூடத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. பொதுமக்கள் அணிவகுத்துச் சென்று அம்மையாருக்கு இறுதி வணக்கம் தெரிவித்தனர்.

தி. மு. க. தலைமை நிலையச் சார்பிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்ட தி. மு. கழகங்களின் சார்பிலும் மற்றும் கழகச் சார்பு மன்றங்களின் சார்பிலும் அம்மையார் சடலத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

வீட்டின் முன் திண்ணையில் துயரம் மிகுந்த நிலையில் அறிஞர் அண்ணா அவர்களும் கழக முன்னணியினரும் அமர்ந்திருந்தனர்.

அன்று மாலை 6-50 மணிக்கு தொத்தா அவர்களது உடல் காஞ்சி வேகவதி நதிக்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வழியெங்கும் மக்கள் திரண்டிருந்து இரங்கல் செலுத்தினர். 7-15 மணிக்கு உடல் தகனம் செய்யப்பட்டது. 7-30 மணிக்கு இரங்கல் கூட்டம் துவங்கியது.

இந்த இரங்கல் கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை தோழர் மு. கருணாநிதி கேட்டுக் கொண்டார். அதை சி. வி. எம். அண்ணாமலை வழிமொழிந்தார்.

நாவலர் நெடுஞ்செழியன்

யாரை அன்புடன் தொத்தா என்று—அண்ணாவுடன் சேர்ந்து அழைத்தோமோ அவர் இயற்கையெய்திவிட்டார். இனி நம்மிடையே அவர் இல்லை என்ற அளவுக்கு நிலை ஆகிவிட்டது.

அண்ணா அவர்களை இந்த அளவு ஆளாக்கிய அன்னையார் அவர் பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு உதவிய அன்னையார்—நமக்கெல்லாம் துக்கம் உள்ளத்தைக் கப்புகிற அளவு சோகத்தை உண்டாக்கி விட்டுப் போய் விட்டார்.

இந்த மீளாத் துக்கத்திலிருந்து அண்ணா அவர்களை மீட்பது எப்படி என்று தெரியாதிருக்கிறோம்.

யாரை, வாய் மணக்க அண்ணா அவர்கள், தொத்தா என்று அழைத்தார்களோ, அவர்கள் இன்று இயற்கை எய்தி விட்டார்.

இந்த நிலைமையில் நமக்கு நாமே ஆறுதல் சொல்லிக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளோம்.

நமக்கு துன்பம் நேரும்போது அண்ணா அவர்கள் ஆறுதல் சொல்வதுண்டு. இன்று அவருக்கு நாம் ஆறுதல் சொல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சுருங்கச் சொன்னால், என்னைப் போன்ற நூற்றுக்கணக்கான தோழர்களுக்கு உற்சாகம் ஊட்டிய அன்னையார் மறைந்துவிட்டார்.

தொத்தா அம்மையார் அவர்கள், வரலாற்றில் இருக்குமளவுக்கு அண்ணா அவர்களே சிறப்பித்திருக்கிறார்கள். அவரது தனிப் பெரும் தாயன்பு நீடுழி வாழ்க!

உற்றார்-உறவினர்-நண்பர்கள் - கழகத்தவர்கள் ஆகிய அனைவருக்கும் என் இரங்கல் உரித்தாகுக."

கலைஞர் மு. கருணாநிதி

தமிழ்த்தாய் காக்கச் சிறை சென்ற அருமைச் செல்வத்தை தந்தவர் தொத்தா அவர்கள். அப்படித் தான் வளர்த்த மகன் சிறையிலிருந்து வந்து தன்னைப் பார்க்கும்போது, விழியால்கூட வரவேற்க முடியாத நிலையில்—அதைக்கண்டு மகன் மயங்கி விழும் நிலையில் அவர்கள் இருந்தார்கள்.

அந்தத் தொத்தா அம்மையார் அவர்களை நாம் இழந்துவிட்டமை—நம்மைப் பெருஞ்செல்வத்தை இழந்த நிலையில் வைத்துவிட்டது. இது ஈடுசெய்ய முடியாதது.

'அண்ணா அவர்களே! நீங்களே மனம் வெதும்பினால், உள்ளம் குமுறினால் எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்வார் யார்?' என்று கேட்கும் நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

இதற்குமேல் ஏதும் பேசமுடியாததால், அண்ணா அவர்கட்கும், அவர்களின் குடும்பத்தார்க்கும், பரிமளம், இளங்கோ முதலியோர்க்கும் என் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நாஞ்சில் கி. மனோகரன்

"நேசம் மிக்க ஒரு தாயை—நெஞ்சம் நிறைந்த ஒரு தாயை—தமிழகத்திற்குக்கிடைத்த ஒப்பற்ற வழிகாட்டியை வழிப்படுத்திய அன்னையை இழந்து நாடு வருந்துகிறது.

அண்ணா அவர்களுக்கு ஆறுதல்கூறி திருப்திப்படுத்தக் கூடிய நிலையில் நாம் இல்லை. நம்மையும் துக்கம் அந்த அளவு கவ்வியிருக்கிறது.

உயர்ந்த தாய்மையின் இலக்கணமான தொத்தா அம்மையாரைப் பிரிந்துவிட்ட குடும்பத்தார்க்கு நம் அனுதாபத்தைத் தெரிவிப்பதைத்தவிர வேறு வழியில்லை. என் சார்பிலும் என் குடும்பச்சார்பிலும் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என். வி. நடராசன்

"இன்று இந்தக் காஞ்சி நகரம் மட்டுமல்லாமல், தமிழ் நாடெங்கும் உள்ள கழகத் தோழர்கள் இல்லம் முழுவதும் துன்பத்தால் வாடுகிறது.

தொத்தா என்ற சிறப்புப்பெயர், கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளது.

தி. மு. கழகத்தில் தோழர்கள் எப்படி எப்படி நடக்கவேண்டுமெனத் தெரிவித்த இந்த உள்ளம் மறைந்துவிட்டது.

கடந்த ஏழு தினங்களாக, அண்ணா அவர்கள், தொத்தா அம்மையார் தம்மை ஆளாக்கிவிட்ட ஒவ்வொரு சம்பவத்தையும் எண்ணி எண்ணி அழுவதை அறிந்திருக்கிறேன். எனவே இத்துன்பத்தை மறந்துவிடுவதோ—மறந்துவிடு என்று கேட்டுக் கொள்வதோ முடியாது.

15, 20 நாட்களுக்கு முன்னர் 'அண்ணாவுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?' என்று தொத்தா கேட்டார்கள். நான், 'மூன்று மாதம் கிடைக்கும்' என்றேன். 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். ஆறு மாதம் தண்டனையானாலும் நான் கவலைப்படப் போவதில்லை! நான் உற்சாகத்துடன் அனுப்பிவைப்பேன்!' என்று சொன்னார்கள்.

அந்த வீர உரையை நான் எப்படி மறக்கமுடியும்?

நம்முடைய குடும்பத்துக்கு—தி. மு. கழகக் குடும்பத்துக்கு—தி. மு. கழகத் தோழர்களுக்கு விலைமதிக்க முடியாதவராய் அண்ணா அவர்கள் எப்படி விளங்கிவருகிறார்களோ அதைப் போலவே தி. மு. கழகத் தோழர்களுக்கெல்லாம் தொத்தா அன்னையாராக இருந்தார்.

அண்ணா அவர்களுக்கும், அண்ணா அவர்களின் குடும்பத்தார்க்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம். தொத்தா அம்மையாருக்கு நம் வணக்கத்தை உரித்தாக்குகிறோம்."

தோழர் என். வி. என். பேசி முடித்ததும், நாவலர் அவர்கள் 'நம் அனைவரின் வணக்கத்தையும் அம்மையாருக்குத் தெரிவிக்கிறோம்' என்று கூறி இரங்கற்கூட்டத்தை முடித்தார்.

இரங்கற் கூட்டத்தில் உரையாற்றியவர்களது பெயர்கள் முறையே வருமாறு :

நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி எம்.எல்.சி., ஏ. கே. தங்கவேலர் எம்.எல்.சி., கொள்கைப்பரப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து, க. இராசாராம் எம்.பி., வழக்கறிஞர் கே. நாராயணசாமி (முதலியார்), தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி, மன்னை நாராயணசாமி, வழக்கறிஞர் தில்லை-வில்லாளன், சி. வி. எம். அண்ணாமலை, ஏ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ., மா. கி. தசரதன் எம்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., நீலநாராயணன்.

○

பரோல் விடுதலைக்கு வழிகாட்டி பண்டிதர் நேருவே!

அண்ணு பரோலில் வந்திருப்பதைக் கிண்டல் செய்து கனம். மன்ருடியார் வளவனூர் கூட்டத்தில் பேசியதற்கு கலைஞர் மு. கருணாநிதி கீழ்க்கண்ட பதிலைத் தருகிருர் :-

அறிஞர் அண்ணு அவர்கள் தன்னை வளர்த்து, ஆளாக்கிவிட்ட தொத்தா அம்மையார் இறுதி மூச்சு விடும்போது அருகிலிருக்க வேண்டும் என்பதற்காகப் பரோல் கோரியதை; அரசியலுக்கு அப்பாற்பட்ட மனிதத்தன்மைக்கும் பெருந்தன்மைக்கும் இருப்பிடம் என்று மக்கள் இதுவரை நினைத்திருந்த கனம் மன்ருடியார் அவர்கள் கிண்டல் செய்து பேசியதைப் படித்தபோது கண்ணியத்தின் காவலர் என்று பெயரெடுத்த அவரா இப்படிப் பேசினுர் என்கிற ஐயப்பாடு தோன்ருமலில்லை. எனினும் அவர் இப்போது இருக்கும் சூழ்நிலையைப் புரிந்துகொண்டவர்கள் அவர் இப்படிப் பேசியதையும் புரிந்துகொள்ள முடியும்.

பதவிக்காகத் திடீர் காங்கிரசான அவருக்கு காங்கிரசின் பழைய வரலாறும் காங்கிரஸ் தலைவர்கள் சாதாரண பரோலையும், நிபந்தனைக்குட்பட்ட பரோலையும் எப்படிப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்கிற விவரங்களும் தெரிந்திருக்க நியாயமில்லை.

இருந்தாலும் வெள்ளைக்காரர்களுக்கு நண்பராயிருந்த அவர், அவர்கள் அந்தக் கால ,காங்கிரசாரை மரியாதையுடன் நடத்தியதை மறந்தது ஆச்சரியமே!

''நேரு சிறையில் இருந்தபோது அவரது மனைவி உயிருக்கு மன்ருடினுர்; இறந்தார். அப்பொழுது சிறையிலிருந்து வெளியே வர மறுத்து விட்டார். ஆனல் அண்ணுதுரையின் நிலை என்ன?''

[நவமணி]

—என்று வளவனூர் கூட்டத்தில் டிசம்பர் 31.அன்று பேசிய கனம் அவர்களுக்குப் பண்டித நேரு, நோய்வாய்ப்பட்டிருக்கும் மனைவியின் அருகிலேயே இருப்பேன் என்கின்ற நிபந்தனைக்கு உட்பட்டு பத்து நாள் பரோலில் விடுதலையானதையும், பிறகு வாரம் ஒருமுறை மனைவியைப் பார்க்க அனுமதி கோரியதையும், ஜெர்மனியில் உள்ள மனைவியைச் சந்திக்க அவரது தண்டனைக் காலத்தைப் பிரிட்டிஷார் குறைத்ததையும் கவனப்படுத்த விரும்புகிருேம்.

பண்டித நேருவின் வரலாற்றுப் புத்தகங்களில் உள்ள தகவல்களைத் தொகுத்துக் கீழே தருகிருேம், அவசியம் கனம் அவர்கள் இதைத் தெரிந்துகொண்டு இனி மேலாவது இப்படி உண்மைக்கு மாருகப் பேசி உளராமலிருப்பார் என்கிற நம்பிக்கையோடு

1934-ம் ஆண்டு பண்டித நேரு டேராடூன் சிறையில் இருந்தார்.

அப்போதுதான் நோய்வாய்ப்பட்டிருந்த அவரது மனைவி திருமதி கமலா நேருவின் உடல்நிலை மிகவும் மோசமாயிற்று.

நேரு, மனைவியைப் பார்க்கத் துடித்தார்.

'நோய்வாய்ப்பட்டிருக்கும் என் மனைவியின் அருகிலேயே இருப்பேன்; வேறு எங்கும் செல்ல மாட்டேன்'

—என்கிற 'கண்டிஷன்' பேரில் சிறையிலிருந்த நேரு பத்து நாட்கள் விடுதலை செய்யப்பட்டார்.

பதிஞேருவது நாள் அவர் இல்லத்திற்கு போலீஸ் 'கார்' வந்து, அவரைச் சிறைக்கு அழைத்துச் சென்றது!

அதன் பிறகு மனைவியின் அருகில் இருக்கவேண்டும் என்பதற்காக அவர் அலகாபத்தில் உள்ள நைனி சிறையில் வைக்கப்பட்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு— அவர் மீண்டும் மனைவியைப் பார்க்க வீட்டிற்குப்போக அனுமதிக்கப்பட்டு. அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன் பிறகு வாரம் இருமுறை மனைவியைப் பார்த்துவர அனுமதி கேட்டார்.

மீண்டும் அவர் அக்டோபர் முற்பகுதியில் சிறையிலிருந்து வீட்டுக்கு வந்து மனைவியைப் பார்த்துச் சென்ருர்.

பின்னர், திருமதி கமலாநேரு போவாலி என்னும் மலையில் உள்ள ஆரோக்யத் தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு மனைவியின் அருகில் இருக்க வேண்டும் என்பதற்காக நேருவும் அல்மோரா சிறைக்கு மாற்றப்பட்டார்.

அதன் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் அனுமதி கோரி, ஒவ்வொரு மூன்ருவது வாரமும் அவர் போலீஸ் காவலோடு சிறையிலிருந்து சென்று 'சானட்டோரியத்திதில்' இருக்கும் மனைவியைக் கண்டு வந்தார்.

அதன் பின்னர் கோடீஸ்வரரான நேருவின் மனைவி சிகிச்சைக்காக 'ஐரோப்பா கொண்டுசெல்லப்பட்டார்.

ஜெர்மனியில் கமலா நேருவின் உடல்நிலை மேலும் மோசமாயிற்று. பிறகு 1935-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி அவரது தண்டனைக்காலம் முடிவதற்கு நாலரை மாதம் முன்னதாகவே நேருவை பிரிட்டிஷார் விடுதலை செய்தனர்.

விடுதலையான கோடீஸ்வரர் நேரு, மனைவியைப் பார்க்க ஜெர்மனி புறப்பட்டார்.

ஒரு மாதத்தில் மனைவியின் உடல்நிலை தேறியது. பிறகு மனைவியை அழைத்துக் கொண்டு கோடீஸ்வரர் நேரு ஜெர்மனியிலிருந்து லண்டன் பயணமானுர்.

திராவிடன் பொங்கல் மலர்

வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் முக்கிய அறிவிப்பு

——(0)-——

எதிர்பாராத சில காரணங்களால் இவ்வாண்டு "திராவிடன்" பொங்கல் மலர் வெளியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே இவ்வாண்டுப் பொங்கல் மலர் வெளியிட இயலாமை குறித்து அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிருேம்.

பொங்கலுக்குப் பிறகு மிகச் சிறந்த முறையில் உங்களையெல்லாம் மகிழ்விக்கும் வண்ணம் அரிய வனப்பு மிக்க தனி மலர் ஒன்று, அளவிலும், தரத்திலும் பொங்கல் மலரைப் போன்றே வெளியிடப்படும்.

விற்பனையாளர்களும் வாசகர்களும் இப்போது காட்டி வரும் ஆதரவையே அப்போதும் தொடர்ந்து வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிருேம்.

தனிமலர் குறித்த விவரங்கள் அடுத்து வரும் இதழ்களில் தெரிவிக்கப்படும்.

•

பொங்கலன்று உங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் முறையில்

திராவிடன் பொங்கல் சிறப்பிதழ்

கழகத் தலைவர்களின் கருத்தோவியங்களோடு-
அதிக பக்கங்களுடன்-
சிறந்த முகப்போவியத்தோடு-
வெளி வரும்.

விலை. 50 புது காசு

பொங்கல் சிறப்பிதழ் 14—1—64 அன்று எங்கும் கிடைக்கும்.
விற்பனையாளர்கள் தங்கள் பிரதிகளுக்கு இப்போதே எழுதவும்.

நிர்வாகி : திராவிடன் : சென்னை-1.

"அறப்போர்" வழக்கு தீர்ப்பு

"அறப்போர்" கிழமை இதழில் தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்களின் உருவத்தை ஆட்சேபகரமான வகையில் வெளியிட்டிருந்ததாக 'அறப்போர்' ஆசிரியர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., அச்சிடுபவர் எம். பி. சத்தியமூர்த்தி ஆகியோர்மீது போலீசார் தொடர்ந்திருந்த வழக்கில், 2—1—64 அன்று உதவி செசன்ஸ் நீதிபதி திரு. பழனிச்சாமி அவர்கள் இருவரையும் "குற்றமற்றவர்கள்" எனக்கூறி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1